Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

மலர் 18
இதழ் 192
தொலைபேசி எண்: 49
தந்தி 889
National Tamil Daily
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஆவணி 5 ஜூலை 26 புதன்கிழமை (21-8-68)




சிதைந்த நிலையில் கடலில் மிதந்துவந்து ஒதுங்கின

# நெடுந்தீவு, அனலைதீவுகரையில் 8 மர்மச் சடலங்கள்

## இலங்கையரா, இந்தியரா? அதிகாரிகள் திகைப்பு

—நமது காரியாலய நிருபர்—

யாழ்ப்பாணம், புதன்

**நெடுந்தீவு, அனலைதீவுக் கடற்கரைகளில் நேற்று மாலைவரை மொத்தம் 8 ஆண்களின் சடலங்கள் ஒதுங்கியிருக்கக் காணப்பட்டன. இவற்றில் 7 சடலங்கள் நெடுந்தீவுக் கடற்கரையிலும், ஒன்று அனலைதீவுக் கடற்கரையிலும் ஒதுங்கியிருந்தன.**

இந்த 8 சடலங்களும் மிகவும் அழுகிய நிலையில் உடல் சிதைந்து காணப்பட்டது. இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை அடையாளம் காணப்பட்டவில்லை. உடைகள் எதுவுமின்றி வெறுமனே கிடந்த இச்சடலங்கள் ஒவ்வொன்றும் 25 வயதிலிருந்து 40 வயதுக்குட்பட்டவர்களாக இருக்கலாமெனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

### படகு விபத்தில் இறந்தவர்களா?

இச்சடலங்கள் அண்மையில் நயினாதீவில் நடைபெற்ற படகுவிபத்தில் இறந்தவர்களினுடையதாக இருக்கலாமெனவும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். இன்னும் வேறு சில தகவல்களைக்கொண்டு தீவுப் பகுதிக் காரியாதிகாரி இது விஷயத்தை இலங்கையிலுள்ள இந்திய தூதராலயத்துக்கு அறிவித்துள்ளார்.

இதுபற்றி நேற்று இந்திய தூதராலய அதிகாரிகளுடன் தொடர்புகொண்டபோது நமக்கு இதுபற்றி இப்போது செய்தி ஏதும் கிடைக்கவில்லை எனத் தெரிவித்தார்கள். எட்டுச்சடலங்களும் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. ஊர்காவற்றுறைப் பொலிஸார் புலன்விசாரணை செய்து வருகின்றனர். (எ. நி)

### தனுஷ்கோடிமீனவரா?

இதற்கிடையில் நெடுந்தீவிலிருந்து நமது நிருபர் பின்வரும் தகவல்களைத் தெரிவிக்கின்றார்.

நேற்று முன்தினம் இரவில் இருந்து நேற்று காலைவரை ஆறு பிரேதங்கள் நெடுந்தீவு தென்கரையில் வந்துசேர்ந்தன. இனம் தெரியாத இப் பிரேதங்கள் அழுகிய நிலையில் கடலிலிருந்து துர்நாற்றம் வீசுகிறது. இப்பிரேதங்கள் அடையும் செய்தி கேட்டதும் நெடுந்தீவு மத்திய கிராம சேவையாளர் திரு. எஸ். இரத்தினசபாபதி இதனைத்துக்கு சென்று பார்வையிட்டதன் மேல் நடவடிக்கைகளுக்கு பொலிசாருக்கு தந்திமூலம் அறிவித்தார்.

கிராம சேவையாளரும் தொண்டர் படையினரும் ஏனைய கடற்கரைகளைப் பார்வையிட்டு வருகிறார்கள். நெடுந்தீவு திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. கே. இராமநாதன் பிரேதங்களைப் பார்வையிட்டார். இப்பிரேதங்கள் அண்மையில் தனுஷ்கோடியிலிருந்து புறப்பட்ட மீனவர்களுடையதாய் இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. கடந்த மூன்று தினங்களுக்கு முன் 15 மீனவர்களுடன் தனுஷ்கோடியில் இருந்து புறப்பட்ட படகொன்று கவிழ்ந்து நீரில் மூழ்கியதாகக் கருதப்படுகிறது. இவர்களில் இருவர் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் மிகுதி 13 பேரும் நீரில் மூழ்கியிருக்கலாம் எனவும் கூறப்படுகிறது. எனவே 13 பேரின் சடலங்களில் சிலவே நெடுந்தீவுக் கரையில் வந்துசேர்ந்துள்ளன என நம்பப்படுகிறது.

முதலாவது சடலம் நேற்று முன்தினம் அனலைதீவுக் கடற்கரையில் காணப்பட்டது. இதனைத் தொடர்ந்து நேற்று மாலை வரை மிகுதி 7 சடலங்களும் நெடுந்தீவுக் கடற்கரையில் ஒன்றன்பின் ஒன்றாக வந்து ஒதுங்கின. இப்பகுதிக் கிராம சேவையாளர்களிடமிருந்து கிடைத்த தகவலைத் தொடர்ந்து, காரியாதிகாரி திரு. எஸ். விநாயகலிங்கம் நேற்றிரவு விதலத்திற்கு விரைந்து சென்று சடலங்களைப் பார்வையிட்டார்.

சடலங்கள் எட்டும் அடையாளம் காணப்படாதபோதும், அவைகள் அழுகிக் கிடந்ததால் பொலிஸாரின் அனுசரணையுடன் திடீர் மரணவிசாரணை அதிகாரிகளான திருவாளர்கள் கே. இராமநாதனும், கே. மருதமுத்துவும் நேற்று தனியாக இருந்து மரணவிசாரணை நடத்தினார்கள்.

நெடுந்தீவு ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரி டாக்டர் கே. தணிகாசலமும், மற்றொரு வைத்திய அதிகாரியான டாக்டர் துரைசிங்கமும் எட்டுச் சடலங்களையும்

(6ம் பக்கம் பார்க்க)

### 'பட்ஜட்' நிறைவேறியது

நம்பளைப்பிட்டி, செவ்.

தேசிய அரசாங்கத்தின் 4வது வரவு-செலவுத் திட்டத்தின் 2ம் வாசிப்பு இன்று மக்கள் பிரதிநிதிகள் சபையில் 38 வாக்குகள் அதிகப்படியாகப்பெற்று நிறைவேறியது.

வரவு-செலவுத் திட்டத்தை ஆதரித்து 85 பேரும் எதிர்த்து 47 பேரும் வாக்களித்தனர்.

யாழ்ப்பாணத்தில்

### நவீன பஸ் நிலையம் விரைவில் அமைக்கப்படும்

## இ. போ. ச. யாழ். மாநகரசபை பேச்சுவார்த்தை பயனளித்தது

உடுவில். செவ்.

இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாய் செலவில் யாழ்ப்பாணத்தில் ஓர் நவீன பஸ்நிலையத்தினை நிறுவுவது சம்பந்தமாக நடந்த பேச்சுவார்த்தைகள் பயனளித்துள்ளன. இந்த பஸ் நிலையம் அமைப்பதில், இலங்கை போக்குவரத்துச்சபைக்கும், யாழ்ப்பாணம் மாநகரசபைக்குமிடையில் ஓர் சமாதான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மத்திய பஸ் நிலையத்தில் ஓர் நவீன பஸ் நிலையத்தை பெருந்தொகை செலவில் அமைத்துத்தர இலங்கை போக்குவரத்துச் சபை முடிவுசெய்து, தற்போதைய பஸ் நிலையத்தை நீண்டகால குத்தகை அடிப்படையில் தரும்படி யாழ்ப்பாணம் மாநகரசபையை கேட்டிருந்தது.

இலங்கை போக்குவரத்துச்சபையின் இவ்வேண்டுகோளை யாழ்ப்பாணம் மாநகரசபை ஏற்றுக்கொள்ள மறுத்ததோடு குத்தகைப்பணமாக உச்ச தொகையும் கேட்டிருந்தது. இதன்காரணமாக இ. போ. சபையினர் புதிய பஸ் நிலையம் அமைக்கும் முயற்சியைக் கைவிட்டிருந்தனர்.

எனினும் போக்குவரத்து சம்பந்தமான வசதியீனங்களை ஆராய்வதற்கென யாழ்ப்பாண மாவட்ட இணைப்புக்குழுவினால் நியமிக்கப்பட்ட ஓர் உபசபையின் தலைவரும், யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபருமான திரு. தி. முருகேசு

(6-ம் பக்கம் பார்க்க)

### நாவற்குழியில் வீடமைப்பு திட்டம் இல்லை

## அரசாங்க அதிபர் விளக்கம்

யாழ்ப்பாணம், புதன்

"நாவற்குழி கைதடிப் பகுதியில் சிங்கள மக்களுக்கான குடியேற்றத் திட்டமோ, வீட்டுத்திட்டமோ அமைப்பதற்கு நிலம் இன்னும் தெரிவுசெய்யப்படவில்லை. இதற்கான முடிக்குரிய நிலம் யாழ். மாவட்டத்தில் எங்காவது இருந்தால் அங்கு யாழ்ப்பாணத்தில் வதியும் சிங்கள மக்களுக்கான வீடுகள் திட்டம் மட்டும் அமைக்கப்படும்."

இவ்வாறு நேற்று நடைபெற்ற பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேணன் அபயசேகர தெரிவித்தார்.

வடபகுதியில் அமைக்கப்படவிருக்கும் சிங்கள மக்களுக்கான வீடமைப்புத் திட்டம்பற்றி நிலவிவரும் தப்பான அபிப்பிராயங்களை நிவர்த்தி செய்வதற்காக கூட்டப்பட்ட இம்மகாநாட்டில் திரு. வேணன் அபயசேகரா இதுபற்றி மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம்நாகவிகாரை பிரதம குருவான வடவத்தை ரத்னாராம நாயக்கதேரோ

(6-ம் பக்கம் பார்க்க)

அலிகான் கொலை வழக்கு:

### பேசமுடியாத நிலையில் சாட்சி அமிர்சுல்தான்

திருக்கோணமலை, செவ்.

பச்சிலம் பாலகன் அலிகான் கொலை வழக்கில் முக்கிய முடிக்குரிய சாட்சி அமிர் சுல்தான் கண்டுபிடிக்கப்பட்டுவிட்டார். இவர் கடத்தப்பட்டுவிட்டதாக முன்னர் சந்தேகிக்கப்பட்டார். திருக்கோணமலையிலிருந்து 4 மைல் தொலைவில் அமிர் சுல்தான் இருந்தார். நினைவிழந்த நிலையில் இ. போ. ச. பஸ் ஒன்றின் மூலம் கொண்டுவரப்பட்டு அவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவர் பேசமுடியாத நிலையில் இருப்பதாகக் கூறப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஞானவாக்கு

மன அலை ஓயும்போது தான் உண்மையை உணர முடியும். பேச்சும் பூச்சும் இதற்கு வழிமுறைகளே. நம உள்ளே இருக்கும் உண்மையோடு லயப்பட்டு ஒன்றும் போது சொல்ல முடியாத அமைதியும் இன்பமும் காணலாம்.

—சுவாமி ராமதாஸ்


# ஈழநாடு

Ceylon's National Tamil Daily
Telegram: EELANADU
Post Box: 49 Jaffna
Telephone: 339.


[illegible] ஆவணி மாதம் 5-ந் திகதி (21-8-68)

## வாழ்க்கைச் செலவு உயர்வு

வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன மக்கள் பிரதிநிதிகள் சபையில் வரவு-செலவுத்திட்ட விவாதத்தில் பேசுகையில் தெரிவித்திருக்கிறார். வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கு அரசாங்கம் எடுத்துவந்துள்ள நடவடிக்கைகள் பற்றி விபரமாக விளக்கிக்கூறிய திரு. ஜயவர்த்தன "இத்தனை நடவடிக்கைகளின் பின்னரும் வாழ்க்கைச் செலவு குறையாதிருப்பதற்கு என்ன காரணம்"? என்று கேட்டு அதற்குச் சில காரணங்களையும் தெரிவித்தார். வாழ்க்கைச் செலவு உயர்வுக்கு என்ன காரணம் என்று பொதுமக்கள் ஆராய்ந்து கொண்டிருக்கப்போவதில்லை. அத்தியாவசியப் பொருள்கள் தட்டுப்பாடில்லாமல் நியாயமான விலையில் கிடைக்க வேண்டும் என்பதுதான் பொதுமக்கள் விரும்புவது.

அரிசி இலவசமாக வழங்கப்படுகிறது. அரிசி, சீனி, மா மற்றும் அத்தியாவசிய உணவுப்பொருள்களும் துணிகளும் அரசாங்கக் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுறவுமொத்த விற்பனவு ஸ்தாபனம், உணவு அமைச்சு, லங்கா சலுசல ஆகியவைகளினால் இறக்குமதி செய்யப்பட்டு நாட்டில் விநியோகம் செய்யப்படுகின்றன. இப்பொருள்கள் பங்கீட்டு முறையில் கட்டுப்பாட்டு விலைத்திட்டத்தின் கீழ் விற்பனை செய்யப்படுகின்றன. ஆயினும் இப்பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது; விலைவாசியும் குறையவில்லை. பங்கீட்டரிசியின் அளவு குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து உள்நாட்டில் அரிசி உற்பத்தி அதிகரித்திருக்கிறதென புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. உள்நாட்டில் அரிசி உற்பத்தி அதிகரித்துள்ள போதிலும் உள்நாட்டு அரிசியின் விலை குறையவில்லை. வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மட்டுமல்ல உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் பலவும் கூட விலை உயர்வாகவே இருக்கின்றன. நமது தேவையைப் பூர்த்திசெய்யக்கூடிய அளவுக்கு இங்கு முட்டை உற்பத்தி அதிகரித்துள்ள போதிலும் இந்தியாவிலிருந்து இங்கு இறக்குமதி செய்யப்படும் முட்டையின் விலையைவிட உள்ளூர் முட்டையின் விலை அதிகமாக இருக்கிறது.

இலங்கையில் மட்டுமல்ல உலகநாடுகள் பலவற்றிலும் விலைவாசிகள் உயர்ந்திருப்பதாகவும் உற்பத்திச்செலவு அதிகரித்துவருவதே விலைவாசி உயர்வுக்குக் காரணம் என்றும் ராஜாங்க அமைச்சர் கூறுகிறார்.

தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக்கழகம் ஆட்சிக்குவந்தபின் அங்கு பல புதிய பிரச்சினைகள் தோன்றியுள்ளபோதிலும், தேர்தல் காலத்தில் தி. மு. கழகத்தினர் ரூபாய்க்கு படி அரிசி கிடைக்கச் செய்வதாகவும் விலைவாசி உயர்வைக் குறைப்பதாகவும் வாக்குறுதியளித்திருந்ததை இப்போது ஓரளவாவது நிறைவேற்றியிருப்பதால், அங்கு அரசாங்கத்துக்கு மக்கள் மத்தியில் ஆதரவு அதிகரித்துவருகிறது. உபதேர்தல்களில் தி. மு. க. அபேட்சகர்கள் வெற்றியீட்டிவருவதற்கு இதுவே முக்கிய காரணம். இங்கு நடந்த பல உபதேர்தல்களில் ஆளும் கட்சி அபேட்சகர்கள் தோல்வியடைந்ததற்கு வாழ்க்கைச்செலவு உயர்வு குறையாததே காரணமென்பதை ஆளும் கட்சியினரே மறுக்கமுடியாது.

ஆனால் வாழ்க்கைச் செலவு உயர்வு ஒரு கட்சியினரைப் பொறுத்த விஷயமல்ல. தேசியப் பிரச்சினையான இவ்விஷயத்தை தேசிய ரீதியில் தீர்ப்பதற்கு சகல அரசியல் கட்சிகளும் மற்றையோரும் முயற்சிசெய்ய வேண்டியது அவசியம். "விலைவாசி உயர்வைக் குறைப்பதற்கு எதிர்க்கட்சியினர் நல்லயோசனைகளைத் தெரிவித்தால் நாங்கள் அதை ஏற்றுச் செயல்படுத்த தயாராக இருக்கிறோம்" என்று ராஜாங்க அமைச்சர் சபையில் கூறியதற்கு எதிர்க்கட்சித் தலைவர்களில் ஒருவரான திரு. பீட்டர் கெனமன் பதிலளிக்கையில், "திரு. ஜயவர்த்தன எதிர்க்கட்சியிலிருந்தபோது யோசனைகள் தெரிவிக்கவில்லை" என்று கூறியிருந்தார். விலைவாசி உயர்வு மக்களையும் நாட்டையும் பொறுத்த விஷயம். இதில் கட்சிப் பிரச்சினைகளுக்கு இடமில்லை. எதெதற்கெல்லாமோ சர்வகட்சிக் குழு நியமிக்கும் நமது அரசாங்கம் இதற்கு தேசிய ரீதியில் தீர்வு காணமுடியாதா?

### திருக்கேதீச்சரத்தில்

# நாவலர் கனவு நனவாகிறது

பல மைல் தூரத்துக்கு அப்பால் வரும்போதே, திருக்கேதீச்சரத்தின் புதிய ராஜகோபுரம் வானத்தில் உயர்ந்திருந்து, வருக வருக என்றழைக்கிறது. பாடல் பெற்ற அந்த புனிதக்கோவிலிலே முன்காலத்தில் பெரிய பெரிய கோபுரங்கள் பல இருந்திருக்கவேண்டும். அன்பற்ற பல வெளியார்கள் வந்து அழித்த அந்தக் கோவில் மீண்டும் புத்துயிர் பெற்று உன்னதமாக உயர்ந்துவருவதைக் கண்டேன்.

உண்மையை அழிக்க யாரால் முடியும்? தற்காலிகமாக உண்மை அழிந்ததாகத் தோன்றினும் மீண்டும் அது தலைதூக்கி உயர்ந்து உலகமக்களுக்கு நன்மை செய்யும் என்பதற்கு அத்தாட்சிபோல் அந்தக் கோபுரம் சொல்லாமற் சொல்லிக்கொண்டிருக்கிறது.

நெருங்கிச் சென்று பார்த்தேன். மகிழ்ச்சியும் பெருமையும் தாங்கவில்லை. ஐந்தடுக்குள்ள இக் கோபுர சிற்பங்கள் கலையழகுடன் மனதைக் கவர்கின்றன. எவ்வளவு நேரம் பார்த்தாலும்பார்த்துக்கொண்டே இருக்கவேண்டும்போல் உள்ளது. நாவலர் பெருமான் இன்றிருந்திருப்பின் அவர் உள்ளம் பெருவகைக்குளிர்ந்திருக்கும். தெய்வீகத்தேசு பொருந்திய திருக்கேதீச்சரத்தில் இருப்பதாயும், சைவசமயிகள் அதை மீண்டும் கட்ட முன்வரவேண்டியது பெருங்கடமையென்றும் அவர் இடித்துச் சொன்னார்கள். அவரது கட்டளையை ஈழத்துச் சைவசமூகம் மெதுவாக நிறைவேற்றி வருகின்றது.

இப் புதிய கோபுரத்தில் என்ன விசேஷம் என்று, செல்லக்கண்ணு ஸ்தபதியார் அவர்களைக் கேட்டேன். அவரது மூத்தமகன் தான் இதைக் கட்டியது. தமக்கு இந்தியாவிலேயே அதிக வேலையென்றும் என்ஜினியராக அரசாங்கத்தில்

### ஐயனார் எழுதுவது

வேலைபார்த்த இரண்டாவது மகன் வேலையை விட்டுவிட்டு, கோயில் திருப்பணி வேலைகளில் தமக்கு உதவியாக ஈடுபட முன்வந்திருப்பதாகத் தெரிவித்தார். சம்பள அடிமையாக வேலை பார்ப்பதைவிட புனிதமான தமது குடும்பத்தொழிலை சுதந்திரமாகச் செய்வதில் எவ்வளவு மதிப்பும் மகிழ்ச்சியும். வருமானம் கூட பல மடங்கு அதிகமாகக் கிடைக்கிறதாம். கண்டியிலுள்ள தலதாமாளிகையில் திருப்பணி வேலையை ஆரம்பித்ததும் அவரது தந்தையார் தானாம்.

ஃ ஃ ஃ

புதியகோபுரத்தில் நாவலர் பெருமானின் உருவமும் வைத்திருப்பதாக அவர் தெரிவித்ததும் எங்கேயென்று ஆவலுடன் கேட்டேன். முன்புறத்தில் பிள்ளையாருக்குப் பக்கத்தில் தலைமாலையும், சிவசின்னங்களும் அணிந்து இரு கைகளையும் கூப்பிநின்றநிலையில் கேதீச்சரநாதனை கும்பிடுகிறார் நாவலர் அவர்கள். சாதாரணமாக நாம் படத்தில் பார்க்கும் உருவமல்ல. என்றாலும் கேதீச்சரம் திருப்பணியில் ஈழத்து சைவசமூகத்துக்கு அறிவுறுத்திய ஐந்தாம் குரவருக்கு சரியான இடம் கொடுத்துள்ளதை மகிழ்ச்சியுடன் என் மனம் பாராட்டியது.

பக்கத்தில் அருணகிரிநாதர். கோபுரத்தின் இரு புறங்களிலும் பதிகம் பாடிய திருஞானசம்பந்தரும், சுந்தரரும் நின்று வழிபடுகின்றனர். ஐந்தடுக்குள்ள இந்த அழகான கோபுரம் கட்டி முடிந்து, கும்பாபிஷேகமும் நடந்துள்ளதால், அந்தப் பகுதிக்கே புதிய கவர்ச்சி ஏற்பட்டுள்ளது.

பஸ்ஸுகளிலும், கார்களிலும் வண்டிகளிலும், கால்நடையாகவும் பல பக்தர் வந்திருந்தார்கள். 'எக்ஸ்பிரஸ்' பஸ்ஸுவில் அளவுக்கு அதிகமான பிரயாணி [illegible] இருந்திருக்கும். தமிழகத்தில் எக்ஸ்பிரஸ் பஸ்ஸுகளில் ஆசனங்களிலுள்ள அளவுக்கே பிரயாணிகளை ஏற்றுவர். இங்கு ஒரு பஸ் அதிகாரியிடம் இதைக் கூறியதற்கு அவர் தயவுகளுக்கு 'கட்டுபடி' ஆகாதென்றார். கட்டணங்களை அவசியமானால் எக்ஸ்பிரஸ் பஸ்ஸுகளுக்குச் சற்றே கூட்டலாம். தமிழகத்திலும் அப்படித்தான். புளிமூடை அடைத்ததுபோல் பிரயாணிகளை அவதிப்படுத்துவது பெரிய இம்சையாகும்.

ஃ ஃ ஃ

திருஞானசம்பந்தர் மடாலயம், திருவாசகமடம், அம்மாமடம் முதலிய இடங்களில் வந்தவர்களுக்கெல்லாம் அன்னதானம் நடந்தது. திருவாசகமடத்திலே தங்கி சாப்பிட்ட சிலஅன்பர்கள், நன்றியுடன் பணம் கொடுத்தபோது பணம் வாங்குவதில்லையென்று மறுத்துவிட்டார்களாம். திருக்கேதீச்சரத்திலேயே அம்மடத்திலுள்ள கிணற்றில் மட்டும்தான் நல்லதண்ணீருண்டு! அம்மடமுள்ள இடத்தில் தான் மணிவாசகப் பெருந்தகையும் தங்கியிருந்தாரோ! நவீன பிரதிஷ்டாபூஷணம் கைலாசநாதக் குருக்களின் தலைமையில் பல குருக்கள்மார்களும் கூடியிருந்து கும்பாபிஷேகத்தை முறைப்படி நடத்திவைத்தது நல்ல காட்சி. காலை 6 மணிக்கு ராஜகோபுர கும்பாபிஷேகம், மூங்கிலால் கூர ஏணிப்படிகள்கட்டி, அதில் பலர் ஏறியபோது, என்ன நேரிடுமோவென்று மனம் அஞ்சியது. ஒரு விக்னமுமின்றி கோபுரத்துக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் சிறப்பான கும்பாபிஷேகம் நடைபெற்றது.

வருகிறகார்த்திகைமாதத்தில் பாலஸ்தாபனம்செய்து, மூலஸ்தானவேலை ஆரம்பமாவதாயும், பணம்தேவைப்படுகிறதென்றும் ஓர் அன்பர் தெரிவித்தார். கௌரி அம்மையின் திருவருளும், நாவலர் பெருமானின் குருவருளும், பல உள்ளங்களைத் தூண்டி, திருப்பணிக்கு வேண்டிய பணம் குவியுமென்பது திண்ணம்.

இக் கோவில்கட்டி கும்பாபிஷேகமும் நிறைவேற, ஈழத்துத் தமிழர் கஷ்டமும் நீங்கி, அவர்கள் நிலையும் மேம்படுவதுடன், இந்திய-இலங்கை நல்லுறவும் பலப்படுவதாக இருக்கும்.

பலகாலம் காணாத பாம்பு மகா மண்டபத்தில் கூரை மீது மீண்டும் தோன்றிப் பலருக்கும் காட்சியளித்தது குறிப்பிடத்தக்கதாகும்.

ஃ ஃ ஃ

மூவரென இருவரென
முக்கண் உடைமூர்த்தி
மாவின்கனி தூங்கும்
பொழில் மாதோட்ட
நன் நகரில்
பாவம்வினை அறுப்பார்
பயில் பாலாவியின்
கரைமேல்
தேவன் எனை ஆள்வான்
திருக்கேதீச்சரத்தானே.

— ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

### ச. ச. நிலைய அடிக்கல் நாட்டுவிழா

சுழிபுரம், செவ். சங்கானை மேற்கு சென். ஜேம்ஸ் சனசமூக நிலையத்திற்கான புதிய கட்டடத்திற்கு வண. கட்டைக் குரவர் ஸ்பம்பதி அடிக்கல் நாட்டி வைத்தார். சி. எம். வேட் பங்கிராஸ் தலைமையில் நடந்த இவ்விழாவில் [illegible] சேவாஸ் சுவாமி [illegible] திருவாளர்கள் இ. [illegible], புவிராஜசிங்கம் உட்படப்பலர் பேசினர்.

## இளவாலை கிராமம் ஒளிமயமாகும்

காங்கேசன்துறை, செவ். பல வருடங்களாக இருளில் இருந்த இளவாலைக் கிராமம் இன்னும் சில மாதத்துக்குள் ஒளிமயமாகும்.

பலகாலமாக ஊர்மக்கள் எடுத்த முயற்சி இன்னும் ஒரு சில மாதத்தில் வெற்றியளிக்கவிருக்கிறது. சேந்தான்குளத்திலிருந்துபெரியவிளான் சந்திவரை மின்சார வெளிச்சம் கொடுப்பதற்காக மின்சார இலாகா தெருக்கரையில் உள்ள மரங்களை வெட்டுவதிலும் வேறு நடவடிக்கைகளிலும் இறங்கியுள்ளது.

## கீரிமலையில் இன்று மாநாடு

அளவெட்டி, புதன். கோவில் வழிபாடு சம்பந்தமாக ஆராய்வதற்காக கீரிமலையில் இன்று ஒரு மகாநாடு நடைபெறவிருக்கிறது. இம்மகாநாட்டில் அகில இலங்கை வேதாகம சித்தாந்த சபை, அகில இலங்கை சைவ அனுட்டான சபை, அகில இலங்கை தர்மகர்த்தாக்கள் சபை மற்றும் சங்கங்கள் கலந்துகொள்ளும்.

கீரிமலை கோவில் மண்டபத்தில் நடைபெறும் இம் மகாநாட்டுக்கு பிரம்மஸ்ரீ க. துரைசாமிக்குருக்கள் தலைமைவகிப்பார்.

## இன்றைய பலன்

(21 - 8 - 68)
ஆவணி ௴ 5 ௳
புதன்கிழமை
திதி- திரயோதசி.

நட்சத்திரம் புனர்பூசம் பகல் 2-46 மேல் பூசம்.

ராகுகாலம் - 12-05 1-35.

சுபநேரம் - 4-35— 6-05.

இன்று பிறந்தவர்களுக்கு இவ்வாண்டு நல்ல ஆண்டாகும். குடும்பஸ்தர் வாழ்வில் கொண்டாட்டமும் கன்னியர் வாழ்வில் களிப்பு மிகுதி. உத்தியோகத்தர்களுக்கு உயர்வு. கமத்தொழில் விருத்தியும் வாகனசுகம். சிறுவர்களுக்கு கல்வி விருத்தியும், வாகனத் தொழில் வரவைக் கொடுக்கும் நல்ல ஆண்டாகும்.

மேஷம்- கருமம் நன்று. கண்ணியம் வேண்டும்.
ரிஷபம்- கனதனம் சேரும் கருமத்தில் வெற்றி.
மிதுனம்- சிந்தனைக் கிலேசம் சோம்பல் மிகுதி.
கடகம்- ஆசைகளைக் கலைப்போர் உண்டு.
சிம்மம்- பேச்சுவன்மை பெரும் புகழ் உண்டு.
கன்னி- சூழ்ச்சி மிகுதி சோதனைக்கட்டம்.
துலாம்- நல்ல முடிவு நன்மைகள் சேரும்.
விருச்சிகம்- இதய பூரிப்பு, இன்பத்தின் சாயல்.
தனுசு- அரசபயம், ஆயுதபீடை.
மகரம்- இன்பம் இனிக்கும் இனிப்பு இருக்கும்.
கும்பம்- பொருள்விரயம் பொல்லாங்குகேட்டல்.
மீனம்- தனம் சேரும், தந்தைவழி நஷ்டம்.

சோதிடக்கலாநிதி
திருமலை வேலுப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடவியட்நாம்மீதான குண்டுவீச்சு குறைக்கப்படமாட்டாது

## அமெரிக்க ஜனாதிபதி ஜோன்ஸன் திட்டவட்டமான அறிவிப்பு

வாஷிங்டன், ஆகஸ்ட் 20

வியட்நாம் போரில், வட வியட்நாம், சமாதானத்துக்கான திட்டவட்டமான நடவடிக்கைகளை எடுக்க முன்வந்தாலன்றி, மேலும் போர் விஸ்தரிப்புக் குறைப்பு நடவடிக்கைகள் எதையும் அமெரிக்கா எடுக்கமுடியாது என்று அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோன்ஸன் அறிவித்துள்ளார்.

வட வியட்நாம் இதுவரை எவ்விதமான பதில் நடவடிக்கை எடுக்கவில்லையென்றும், வட வியட்நாம் மீதான குண்டு வீச்சை அமெரிக்கா குறைக்காது என்றும் திரு. ஜோன்ஸன் குறிப்பிட்டார்.

சமாதானத்துக்கான தனது ஆர்வத்தைக்காட்டும் வகையில் வட வியட்நாம் போர் விஸ்தரிப்புக் குறைப்பு நடவடிக்கைகளை எடுக்காத பட்சத்தில், மேலும் போர் விஸ்தரிப்புக் குறைப்பு நடவடிக்கைகளை அமெரிக்கா மட்டும் மேற்கொள்வதன் மூலம், அமெரிக்க துருப்புகளுக்கு அதிக இழப்பு நேர்வதற்கு அனுமதிக்க இயலாதென்று அவர் கூறினார்.

### இதுவே அடிப்படைக் கொள்கை

அமெரிக்க ஜனாதிபதி பதவிக்குத் தம்மைத் தொடர்ந்து வருபவர் யாராயிருந்தாலும், வியட்நாம் போர் சம்பந்தமாக இப்போது கடைப்பிடிக்கப்படும் இந்த அடிப்படைக் கொள்கையையே பின்பற்ற வேண்டியிருக்குமெனவும் அவர் தெரிவித்தார்.



எதிர்வரும் அமெரிக்க ஜனநாயகக்கட்சியின் மாநாட்டுக்கு முன்னர் வடவியட்நாம் மீதான குண்டு வீச்சை முற்றுமுழுதாக நிறுத்துவதென்று ஜனாதிபதி ஜோன்ஸன் அறிவிப்பார் என்ற வாதத்தை அவருடைய நேற்றைய உரை பொய்ப்பித்துவிட்டது.


### ஹரிமன் நம்பிக்கை

இதற்கிடையில், பாரிஸில் நடைபெறும் வியட்நாம் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொண்டுள்ள அமெரிக்கத் தூதுகோஷ்டியின் தலைவரான அவெரெல் ஹரிமன், பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெறுமென்பதில் தமக்குள்ள நம்பிக்கையை வெளியிட்டுள்ளார்.

பேச்சுவார்த்தைகளை முறிபடிக்கும் நோக்கம், இருசாராருக்குமே இடையாது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

# 275 பாடல் பெற்ற சிவ ஸ்தலங்கள் தரிசனம்

## தில்லை திருமுறைக்கழகத் தலைவர்



பாரதநாட்டில் பாடல் பெற்ற சிவ ஸ்தலங்களை தரிசித்துவிட்டு கடைசியாக ஈழத்திலுள்ள திருக்கோணமலை, திருக்கேதீச்சரம் இவ்விரு ஸ்தலங்களையும் சிதம்பரம் திருமுறைக்கழகத் தலைவர் சிவத்திரு. கணபதிப்பிள்ளை, தரிசித்து தமது வாழ்க்கை லட்சியத்தை திருவருளால் நிறைவேற்றினார். திருக்கேதீச்சரம் கும்பாபிஷேகத்தில் திருமுறை ஓதிக்கொண்டு, தூபம்போடும் கைங்கரியம் செய்தார்கள்.

அவர் தினசரி புற்று மண்ணால் சிவலிங்கம்செய்து சிவபூசை செய்து 275 லிங்கங்களைக்கொண்ட சிவலிங்கப் படம் மேலே தரப்பட்டுள்ளது.

# செக். துருப்புகளின் போர்ப் பயிற்சிகள்

பிராக், ஆக. 20

செக்கோஸ்லாவாக்கியத் துருப்புகள், இவ்வாரத்தில் போர்ப்பயிற்சிகளில் ஈடுபடவிருக்கின்றன. இத்தகவலைச் செக். பத்திரிகையொன்று வெளியிட்டுள்ளது.

செக். துருப்புகளின் இப் போர்ப்பயிற்சிகளின்போது, வார்ஸோ ராணுவ ஒப்பந்த நாடுகளிலிருந்து பார்வையாளர் சமுகமளிப்பரென்றும் அச்செய்தித்தாளனம் தெரிவித்துள்ளது.

### 'பிராவ்டா' தாக்குதல்

இது இவ்வாறிருக்க, ரஷ்யப் பத்திரிகையான 'பிராவ்டா' செக். அரசியல் வாதிகள் மீது தனது தாக்குதலை மீண்டும் ஆரம்பித்துள்ளது.

செக். அரசியல் தலைவர்கள், நாட்டிலுள்ள உண்மையான தொழிலாளர்களை இம்சித்து வருவதாகப் 'பிராவ்டா' குற்றஞ்சாட்டியுள்ளது.

பிரட்டிஸ்லாவாப் பேச்சுக்களில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு மாறான நடவடிக்கைகளில் செக். தலைவர்கள் ஈடுபட்டு வருவதாகவும் அப் பத்திரிகை குறை கூறியுள்ளது.

### வெள்ளிப்பாளம் பிடிபட்டது

வல்வெட்டித்துறை, செவ்.

வல்வெட்டித்துறை பொலிசாருக்கு கிடைத்த இரகசியத் தகவலைத் தொடர்ந்து சப்இன்ஸ்பெக்டர் திரு. ரஞ்சித் விஜயசேகர தலைமையில்சென்றபொலிஸ் கோஷ்டியொன்று வல்வெட்டித்துறையில் வைத்து ரூபா 1250 பெறுமதியான 5 இறாத்தல் வெள்ளிப் பாளங்களைக் கைப்பற்றியுள்ளது. சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைதுசெய்யப்பட்டு சுங்க இலாகாவினரால் விசாரணை செய்யப்படுகிறார்.

# இந்திய வெள்ளத்தில் சிலரின் தீரச்செயல்கள்

புதுடில்லி, ஆக. 20

அண்மையில் வட இந்தியாவில் ஏற்பட்ட வெள்ளத்தில் பலத்த ஆட்சேதமும், பொருட்சேதமும் ஏற்பட்டபோதும், ஆங்காங்கேயிருந்து கிடைக்கும் சில செய்திகள், வெள்ளத்திலும் மக்கள் சிலர் காட்டியுள்ள தீரத்தையும் தியாகத்தையும் எடுத்துரைப்பனவாக அமைந்துள்ளன.

உத்தரப்பிரதேசத்தில், ஆறொன்று பெருக்கெடுத்ததன் விளைவாக ஓரிடத்தில் நான்கு மாணவர்கள் அகப்பட்டுக்கொண்டனர். இவர்கள் நால்வரும் ஊர்சுற்றிப் பார்க்கப்புறப்பட்டவர்களாவர்.

அப்போது, ஆற்றுவெள்ளத்தையும் பொருட்படுத்தாது, கிராமவாசி ஒருவர் அந்த நான்கு மாணவர்களுக்கும் உணவு எடுத்துச் சென்றதாகக் கூறப்படுகிறது.

குஜராத்தில், ராஜ்ய அரசாங்கக் கட்டிடத்தாபனமொன்றில் கடமையாற்றும் காவலாளர் ஒருவர், தாபனத்தின் பணம் 1 1/2 லட்சம் ரூபாவைக் காப்பாற்றியுள்ளார்.

இந்தக் காவலாளர், பணப் பெட்டிகளுடன், வெள்ளத்தில் அகப்பட்ட கட்டிடமொன்றின் கூரைமீது, உணவு எதுவுமின்றி, 34 மணி நேரமாக அமர்ந்திருந்தார்.

### தெ. ஆபிரிக்காவில் மாணவர் அமைதியின்மை

கேப்டவுன், ஆக. 20

தென்னாபிரிக்காவில், கேப்டவுன் பல்கலைக்கழகத்தில், கறுப்பர் ஒருவர் போதனாசிரியராக நியமிக்கப்பட்டதை அரசாங்கம் தடை செய்ததை ஆட்சேபிக்குமுகமாக நாட்டின் பல பாகங்களிலும் மாணவர் அமைதியின்மை தோன்றியுள்ளது.

ஜோஹன்னர்ஸ்பேர்க்கில், மாணவர்கள் ஆட்சேப ஊர்வலமொன்றை நடத்தினர். மற்றும் பல நகர்களிலும் மாணவர் ஆர்ப்பாட்டங்களை நிகழ்த்தினர்.

அமெரிக்க

### சிறைச்சாலையில் குழப்பம்

வாஷிங்டன், ஆக. 20

அமெரிக்காவின் இராணுவச் சிறைச்சாலையொன்றில் ஏற்பட்ட குழப்பத்தை அடக்கச் சுமார் 200 இராணுவப் பொலிசார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் நடத்தவேண்டியிருந்தது.

சில நாட்களுக்கு முன்னர்தான், இச்சிறைச்சாலையிலுள்ள கைதிகள் தமது சிறை வாழ்க்கை வசதிகள், நிலைமை இவைசம்பந்தமாகத் தாம் கொண்டிருந்த அதிருப்தி காரணமாகக் கிளர்ச்சி செய்திருந்தனர்.

நேற்று மீண்டும் சிறைக் கைதிகள் குழப்பம் விளைவித்தனர். இதற்கான உடனடிக்காரணம் சிறைக்காவலாளிகளைக் கைதிகள் 'ஐயா' என்று அழைக்கவேண்டும் எனப் புதிதாகப் பிறப்பிக்கப்பட்ட உத்தரவேயாகும் எனக் கூறப்படுகிறது.

நிலைமை இப்போது கட்டுக்கடங்கி விட்டதாகச் சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

### தீர்மானம்

புத்தளம், செவ்.

அங்கத்துவப் பணத்தை 5 ரூபாவாக்குவ தென்றும் தினமும் நூல்நிலையத்தைத் திறந்துவைத்து நூல்நிலையோகிப்பவர்... மக்கள் நூல்நிலையம் ... விசேஷ ... தீர்மானிக்கப்பட்டது.

### கனடா கார் விபத்து நான்கு இந்தியர் மரணம்

ஒட்டாவா, ஆக. 20

ஒட்டாவைச் சேர்ந்த நான்கு இந்தியர்கள், இங்கு நடைபெற்ற ஒரு கார் விபத்தில் இறந்துள்ளனர். மற்றும் இருவருக்குக் காயமேற்பட்டது.

கார், லொறி ஒன்றுடன் மோதியதன் விளைவாகவே இவ்விபத்து ஏற்பட்டது. லொறியிலிருந்த இருவருக்கும் காயமேற்பட்டது.

### புதிய சாதனை

லண்டன், ஆக். 20

ஆங்கிலக் கால்வாயை 4 ஆண்களும் 2 பெண்களும் கொண்ட கோஷ்டியொன்று நீந்திக் கடந்துள்ளது. 13 ஆண்டுகளுக்கு முன்னர் இக்கால்வாயை பிரிட்டிஷ்காரர் ஒருவர் நீந்திக் கடந்த சாதனையை இது முறியடித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சிங்கம் மார்க் சந்தனாதித் தைலம்
ஈழவளநாட்டிலே எங்குமே கிடைக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் கந்தசுவாமி கோயில்

# மணிக்கூட்டுக்கோபுர உச்சியில் பதுங்கியிருந்தவர் கைது

யாழ்ப்பாணம், புதன்

நல்லூர் கந்தசுவாமி கோவில் மணிக்கூட்டுக் கோபுரத்து உச்சியில் பதுங்கியிருந்த ஒருவர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டார். நல்லூர் கந்தசாமி கோவிலில் நேற்றுமுன்தினமிரவு இச்சம்பவம் நடைபெற்றது.

கோவில் உள்மண்டபத்துள் இருக்கும் புதிய மணிக்கூட்டுக் கோபுரத்துள் 40 அடி உயரத்தில் இருந்த சந்தேகநபரை கோவிலுக்குள் நின்ற பெண்களே முதலில் கண்டனராம். பெண்களின் சத்தத்தைக்கேட்ட சந்தேகநபர் பொலிசார் அங்கு வருமுன்னரே உச்சியிலிருந்து பாய்ந்து கோவில் சுவருக்கு மேல் விழுந்தபோது கோவில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திரு. இராசையா அவரை கைதுசெய்யப்பட்டார்.

கைதுசெய்யப்பட்டவர் மணிக்கூட்டுக் கயிறு வழியாகவே மேலே ஏறியதாகவும், எளவாடும் நோக்கத்துடனேயே அவர் அங்கு சென்றிருக்கலாமெனவும் பொலிசாரின் விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது சந்தேகநபரான ஏரூர்ச் சேர்ந்த இளையதம்பி செல்லையா என்பவர் ஏற்கனவே பல குற்றச்சாட்டுகளுக்கு உள்ளானவர் எனவும் பொலிஸாருக்கு தெரியவந்துள்ளது.

இவர் தற்போது பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார்- இச் சம்பவத்தைத் தொடர்ந்து நேற்று முதல் நல்லூரில் சாதாரண உடையணிந்த பொலிசாரின் கண்காணிப்பு மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

[ஈ. நி]

## கல்வி அதிபதிக்கு நன்றி

அனலைதீவு, செவ்.

அனலைதீவு சதாசிவ வித்தியாலயத்திற்கு நிரந்தரமாக அதிபர் ஒருவரை நியமித்தது குறித்து வடமாநில கல்வி அதிபதிக்கு நன்றி தெரிவித்து அனலைதீவு கிராம முன்னேற்றச்சங்கத் தலைவர் புறக்டர் செ. யோகராசா கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

## பிரயாணிகள் அதிருப்தி

உரும்பராய், செவ்.

மறவன்புலோ ஊடாக சேரதீவிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் பஸ் தினமும் மாலையில் 5-30மணிக்கு வரும்பொழுது மறவன்புலோ, கோவிலாக்கண்டி, கச்சாய்தோப்பு பிரயாணிகளை ஏற்றாமல் விட்டுவிட்டு வருவதால் பிரயாணிகள் அதிருப்தியடைகின்றனர். வெளியூர்களிலிருந்து அங்கு வருபவர்கள் வேறு பஸ் வசதி இல்லாமல் கஷ்டப்படுகின்றனர்.

—

உரும்பராய், செவ்

தலைமன்னார் வெள்ளாங்குளம் அரசினர் பாடசாலையில் கடமையாற்றிய திரு. செ. நமசிவாயம் ஆசிரியர் வண்ணார்பண்ணை இந்துக் கல்லூரித் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

### மாணவர் மலர்

மாணவர்மலர் இன்று இடமின்மையால் வெளிவரவில்லை. அடுத்த போயாதினத்துக்கு முதல் நாள் (29-8 68) வெளிவரும்.

## பிரயாணிகள் நடந்து சென்றனர்

உரும்பிராய், செவ்.

ஆஸ்பத்திரிக்கு அவசரமாகச் செல்லவேண்டிய பிரயாணிகள் நடந்து சென்றனர்.

யாழ்ப்பாணம் - பலாலி றோட்டில் யாழ்ப்பாணம் நோக்கிவந்துகொண்டிருந்த இரட்டைத்தட்டு பஸ் ஒன்றின் பின்பக்கமாக காரொன்று மோதியதைத்தொடர்ந்தே பிரயாணிகளுக்கு இந்தநிலைமை ஏற்பட்டது காருக்கும் பஸ்சுக்கும் சிறிதளவு சேதம் ஏற்பட்டது.

—

## டிப்ளோமா பயிற்சிக்குச்செல்கிறார்

உரும்பராய், செவ்.

சரவெட்டியைச் சேர்ந்த திரு. கே. கருணாகரன் [22வயது] இந்தியாவிலுள்ள அடையாற்று கர்நாடக இசைக்கல்லூரியில் 'சங்கீத டிப்ளோமா' பட்டம் பெறுவதற்காக இம்மாதம் 21-ந் திகதி இந்தியா புறப்படுகிறார்.

'நெல்லியடி மத்தியமகா வித்தியாலயத்தின் பழைய மாணவரான இவர், இலங்கையில் பல பாகங்களில் கர்நாடக இசைக்கச்சேரிகள் நடாத்தியுள்ளார்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

புதன் 21—8—68

[செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00]

**344 மீற்றர் அல் 61 மீற்றர்**

காலை 6-30 நமதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 ஜதிப்பாடல்கள், 7-30 குரல்வளை, 8-00 இசைவேளை, 8-15 இன்னைமியகீதங்கள்.

**344 மீற்றர் அல் 61 மீற்றர்**

பகல் 12-00 தொழிலாளர்வேளை, 1-00 மாதர் கேட்டவை.


**344 மீற்றர் அல் 49 மீற்றர்**

மாலை 5-00 பிறந்தநினைசழந்தைகள், 5-30 ஓடிவிளையாடு பாப்பா.

இரவு 6-15 நேயர்விருப்பம், 6-45 பாலகம், 7-00 கிராமசஞ்சிகை, 7-30 பாட்டு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 8-30 பேச்சு, 9-45 உரைச்சித்திரம், 10-15 தேர்ந்தஇசை.

# றோட் மாஸ்டர் பைசிக்கிளைக் கண்டு பிடிக்கும் போட்டியில் பங்கு பற்றி செல்வராகுங்கள்

SUPER ROAD MASTER ALL-STEEL BICYCLE



## ரூ 7700/-க்கு மேற்பட்ட பரிசுகள்

**1 ஆம் பரிசு ரூ. 2,500/-**
அத்துடன் விற்பனையாளருக்கு ரூ. 250/-

**2 ஆம் பரிசு ரூ. 1,500/-**
அத்துடன் விற்பனையாளருக்கு ரூ. 150/-

**3 ஆம் பரிசு ரூ. 1,000/-**
அத்துடன் விற்பனையாளருக்கு ரூ. 100/-

தலா ரூ. 225/- கொண்ட 10 தேறுதற் பரிசுகள்

**போட்டி விதிகள் :-**

1. 1968 ஆகஸ்ட் 9-ந் தேதிக்கும் 1968 அக்டோபர் 10-ந் தேதிக்கு மிடைப்பட்ட காலத்தில் றோட்மாஸ்டர் ஸ்டாண்டர்ட் 22" பைசிக்கிள் ஒன்றனைக் கொள்வனவு செய்யும் அனைவரும் இப்போட்டியிற் பங்கு பற்றலாம்.

2. மேலே இடதுபுறத்தில் றோட்மாஸ்டர் ஸ்டாண்டர்ட் 22" பைசிக்கிளின் படமும் அதன் கீழே 3 பைசிக்கிள்களின் சித்திரமும் காணப்படுகின்றன. நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் றோட்மாஸ்டர் ஸ்டாண்டர்ட் 22" பைசிக்கிளை இனங்கண்டு, கொடுக்கப்பட்டிருக்கும் இடத்தில் புள்ளடி இட்டு, கூப்பனை முறைப்படி நிரப்பி, றோட்மாஸ்டர் ஸ்டாண்டர்ட் 22" பைசிக்கிள் கொள்வனவுக்குரிய பற்றுச் சிட்டுடன் சேர்த்து "றோட்மாஸ்டர் பைசிக்கிள் கண்டு பிடிக்கும் போட்டி", த. பெ. 1610, கொழும்பு என்னும் முகவரிக்கு 1968 அக்டோபர் 10-ந் தேதி பி. ப. 4 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கும் வண்ணம் தபாலில் அனுப்பி வைப்பதே.


3. றோட்மாஸ்டர் ஸ்டாண்டர்ட் 22" கொள்வனவு செய்தமைக்கான பற்றுச்சீட்டு ஒவ்வொரு பிரவேசப் பத்திரத்துடனும் இணைத்தனுப்பப்படும் பட்சத்தில் ஒருவர் எத்தனை பிரவேசப் பத்திரங்களையும் அனுப்பலாம். இந்தப் பற்றுச் சிட்டில் உங்கள் பைசிக்கிளின் இலக்கமும் கொள்வனவு செய்த தேதியும் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

4. 1 ஆம், 2 ஆம், 3 ஆம் பரிசுகளும் தேறுதற் பரிசுகளும் வெகு சுத்தமான, வெகு துப்புரவான, கவர்ச்சியான முறையில் சமர்ப்பிக்கப்படும் பிரவேசப் பத்திரங்களுக்கு வழங்கப்படும்.

5. சரியான பிரவேசப் பத்திரம் எதுவும் வந்து சேராவிட்டால், மேற் குறித்த ஒழுங்குப் பிரகாரம், வெகு சுத்தமான, வெகு துப்புரவான, கவர்ச்சியான முறையில் கிடைக்கும் கிட்டிய பிரவேசப் பத்திரங்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்.

6. ஈ. பீ. கிறீஸி அன்ட் கம்பனி லிமிட்டெட், கிராண்ட் அட்வேர்டைஸிங் (இலங்கை) லிமிட்டெட் தாபனங்களின் வேலை செய்யும் ஊழியரோ அவர்களின் குடும்பத்தவர்களோ இந்தப் போட்டியில் பங்கு பற்றலாகாது.

7. இந்தப் போட்டி முடிவுகள் விஷயமாகக் கடிதப் போக்குவரத்து எதுவும் வைத்துக் கொள்ளப்படமாட்டாது. உள்நாட்டு விவகார அமைச்சின் பிரதிநிதி ஒருவரையும் உள்ளடக்கியதான நடுவர் குழுவின் தீர்ப்பே முடிவானதாயிருக்கும்.




பெயர்: ..........................

முகவரி: ..........................

ஏக விநியோகத்தர்கள்: ஈ. பீ. கிறீஸி அன்ட் கம்பனி லிமிட்டெட் 55/57 ராணி வீதி, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

**பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்.**

## பிரவேசம் — 1969

பின்வரும் வகுப்புகளிக் மாத்திரம் வெற்றிடங்கள் உண்டு:

1-ம் தரம் (1962)
4-ம் தரம் (1959)
6-ம் தரம் (1957)
9-ம் தரம் (1954)
11-ம் தரம் (1952)

விண்ணப்பகாரர் மேலே ஒவ்வொரு வகுப்பின் பின்னும் அடைப்புக் குறிகள் காட்டியிருக்கும் வருஷம், மார்கழி 31-ம் திகதிக்கு பின்னராகப் பிறந்தவராய் இருத்தல் வேண்டும். பாடசாலை அலுவலகத்திலிருந்து பெறப்படும் விண்ணப்பப் பத்திரங்களில், பதிலுக்கான முத்திரையிடப்பட்ட உறையுடன் ஆவணி மாதம் 31-ம் திகதிக்கு முன்னராக விண்ணப்பிக்கவும். பரீட்சைத் திகதி அறிவிக்கப்படும்.

க. பூரணம்பிள்ளை,
6-8-68. அதிபர்.
938

**கட்டைவேலிக் கிராமசபை**

## விளம்பரம்

கீழ்க்காணும் வேலைக்கு 1968-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 2-ம் திகதி திங்கட் கிழமை வரையும் கேள்விகள் அழைக்கப்படுகின்றன. கேள்விப் பத்திரங்கள் ஆவணி மாசம் 31-ம் திகதி பகல் 12 மணிவரையும் வழங்கப் படும். ஏனைய விபரங்கள் கந்தோரிலறிந்து கொள்ளலாம்.

இம்புலிட்டிக்கடலில் வான் அமைத்தல்.

வெ. சபாபதிப்பிள்ளை,
காரியதரிசி,
நிர்வாகஸ்தருக்காக.
கட்டைவேலி கி. ச.
அல்வாய்,
19-8-68. 939

**மாணவர்க்குத் தற்காலிக தடை**

பம்பலப்பிட்டி, செவ்.

கொழும்பு பல்கலைக்கழகத்திலுள்ள 16 மாணவர்கள் அண்மையில் நடைபெற்ற யூனியன் தேர்தலைத் தொடர்ந்து நடைபெற்ற தாக்குதல் சம்பவங்கள் குறித்து தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர்.

## திருமண அறிவித்தல்

மணமகன்- செல்வன். ந. கனகேஸ்வரன்
(விரிவுரையாளர், ஆசிரியர் கல்லூரி அட்டாளைச்சேனை)
மணமகள்- செல்வி ச. சரஸ்வதி
(ஆசிரியை மகாஜனா கல்லூரி தெல்லிப்பளை)

இவர்களின் திருமணம் 26-8-68 திங்கட்கிழமை இரவு 11 மணியளவில் மணமகள் இல்லத்தில் நடைபெறும். நண்பர்களும் உறவினர்களும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

கொண்டாட்டம்; மணமகள் இல்லம்; 27-8-68.
மணமகன் இல்லம்: 28-8-68.

தனிப்பட்ட அழைப்புக்கள் இல்லை

| | |
|---|---|
| மணமகளின் பெற்றோர் | மணமகனின் பெற்றோர் |
| திரு. ச. நடராசா | திரு. த. சங்கரப்பிள்ளை |
| (கலையகம் பென்சனியர்) | (இளைப்பாறிய ஆசிரியர் மல்லாகம்) |
| பாரியாரும் | பாரியாரும் |
| கொல்லங்கலட்டி, தெல்லிப்பளை. 932 | மல்லாகம். |

## நல்லூர் கந்தன் திருவிழாவை

முன்னிட்டு

## விசேஷ விலை குறைப்பு!

நைலோன், சற்றின், கொட்டன்
வயில் சாறிகளும்
டர்லின், நைலோன், நொன்னயன்
கொட்டன் சேட்டுகளும்
மற்றும்
எல்லாவிதமான ஜவுளி வகைகளும்
விஷேசமாக விலை குறைக்கப்பட்டிருக்கிறது
உங்கள் தேவைகளுக்கு
முந்திக்கொள்ளுங்கள்

# கணேசானந்தாஸ்

[முட்டாசுக்கடை சந்தி]
208, கே. கே. எஸ். ரேட் — யாழ்ப்பாணம்

## "சூரியன் மார்க்"

## வாசனை சந்தனப் பவுடர்

**சந்தன வில்லைகள்**

கோவில் தேவைகளுக்கும் திருமணம் முதலிய வைபவங்களுக்கும் உகந்தது.

இடைக்குமிடம்:

**சுந்தரம் பிறதர்ஸ்**

73, மின்சாரநிலையவீதி. யாழ்ப்பாணம்.

உதைபந்தாட்டம் 2-ம் ஆட்டம்

# மட்டக்களப்பு வெற்றி

## மீண்டும் கொழும்பில் மோதும்

யாழ்ப்பாணம், செவ்.

திருக்கோணமலைத் தெரிவுக் கோஷ்டிக்கும், மட்டக்களப்புத் தெரிவுக் கோஷ்டிக்குமிடையில், இரண்டாம் முறையாக மட்டக்களப்பில் நடைபெற்ற "தேசிய வெற்றிக் கிண்ணத் திற்கான" உதைபந்தாட்டப் போட்டியில், மட்டக்களப்புக் கோஷ்டி வெற்றி பெற்றது.

ஆட்டம் தொடங்கியதுவடையும்வரை இரு கோஷ்டியினரும் மிக வேகமாகவும் திறமையாகவும் விளையாடினர். மட்டக்களப்புகோஷ்டியின் முன்னணிவீரர்களின் வேகமான முன்னேற்றத்தை திருக்கோணமலைக் கோஷ்டியின் பின்னணி வீரர்களால் தடுத்துநிறுத்த முடியாமல் திணறடித்தனர். மட்டக்களப்புக் கோஷ்டியின் முன்னணி வீரர் கே. வேகராசா மிகவும் திறமையாக விளையாடி அடிக்கடுக்காக மூன்று கோல்களைப் போட்டார். திருக்கோணமலைக் கோஷ்டியின் முன்னணி வீரர்கள் கோல்கள் போட எடுத்துக் கொண்ட பல முயற்சிகளை மட்டக்களப்பு கோஷ்டியின் கோல்காப்பு வீரர் பீற்றர் மிக சாதுரியமாக முறியடித்தார். திருக்கோணமலைக் கோஷ்டியின்முன்னணி வீரர் லட்சுமணன் தமது கோஷ்டியின் சார்பில் ஒருகோலைப் போட்டார். ஆட்டமுடிவில் மட்டக்களப்புக்கோஷ்டி திருகோணமலை கோஷ்டியை4-1 கோல்களால் தோற்கடித்தது.

இப்போட்டிக்கு பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. சி. பேரின்பநாயகம் மத்தியஸ்தம் வகித்தார்.

இவ்விரு கோஷ்டியினருக்கும் முதலில் திருக்கோணமலையில் நடைபெற்ற முதல் ஆட்டத்தில் திருக்கோணமலைக்கோஷ்டி மட்டக்களப்புக் கோஷ்டியை4—1கோல்களால் வெற்றிபெற்றது. இவ்விரு கோஷ்டியினரும் சமமான புள்ளிகளைப் பெற்றமையால், மூன்றாவது முறையாக இவ்விரு கோஷ்டியினரும் மிகவிரைவில் கொழும்பில் போட்டியிடவிருக்கின்றனர். இப்போட்டியில் வெற்றிபெறும் கோஷ்டியுடன் யாழ். தெரிவுக்கோஷ்டி போட்டியிடும். [தே.நி.]

## விதைகள் வழங்கப்பட்டன

புன்னாலைக்கட்டுவன், செவ்.

திருநெல்வேலி பிரயோக சோதனைத் திட்டத்தினரால் ஊரெழு இளைஞர் விவசாயக் கழக, மாதிரி சங்க அங்கத்தவர்களுக்கு அண்மையில் கத்தரி, அகத்தி முதலிய விதைகள் இலவசமாக வழங்கப்பட்டன.

மானிப்பாய்
**வெலிங்டன்** (sic: **வெஸ்லி சினிமா**)

தினசரி 6-30, 9-30
லோயா தினங்களில் 2-30
ஜெமினி - சரோஜாதேவி
நடித்த

## கல்யாண பரிசு

[புத்தம் புதிய கொப்பி]

2-வது வாரம்
**மனோகரா**
[யாழ்ப்பாணம்]
தினசரி
2-30, 6-30, 9-30 மணி
ஜெய்சங்கர் - விஜயலட்சுமி
கே. பி. சுந்தராம்பாள்
நடித்த

## உயிர்மேல் ஆசை

56-வது தினம்!
**ராணி**
(யாழ்ப்பாணம்)
ஜெமினி — சரோஜாதேவி
நடித்த
**பணமா பாசமா**

REGAL JAFFNA
Daily at
4 45 7-00 & 9-45 P. M.
Robert Vaughn
David Mc Callum
in
M. G. M's
**One of Our Spies is Missing**
[in color]

2-வது வாரம்
**ராஜா**
[யாழ்ப்பாணம்]
தினசரி 2-30, 6-30, 9-45
A. V. M. ராஜன்
புஸ்பலதா-சோ
திறம்பட நடித்த

## கற்பூரம்

எஸ். ரி. ஆர். பிலிம்ஸ்
வெளியீடு

**வின்ஸர்**
தினசரி 3 காட்சிகள்
ராஜேந்திரன் விஜயகுமாரி
நடித்த
**சாரதா**

கிளாஸா (கொழும்பு) | கைலன் (கொழும்பு) | வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
கிங்ஸ்லி (கொழும்பு) | விஜயா (மருதானை) | ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை)



ரவிச்சந்திரன்
ஜெயலலிதா
மனோரமா
நாகேஷ்
முத்துராமன்
நடித்த



ஸ்ரீ விநாயகா
பிக்சர்ஸ்

# நான்

கெபிட்டல்
(கொழும்பு)
ராஜ்கபூர் — வைஜயந்திமாலா
நடித்த

## சங்கம்

**தேவை**

யாழ்ப்பாணம் பிரதான வீதியிலுள்ள வியாபார ஸ்தாபனமொன்றிற் மனேஜராகக் கடமையாற்றக் கூடிய ஒருவர் தேவை. கொடுக்கும் பங்கு விகிதப்படி லாபம் பகிரப்படும். மனேஜருக்கு மாதவேதனம் ரூபா 150/- மிகுதி விபரங்கள் அறியவருக. 91, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
27

வதிரிட்டி ப. நோ. கூ. சங்கத்திற்கு ஒரு மனேச்சர் தேவை. தராதரம் 8-ம் வகுப்பு சித்தியடைந்தவராயும், கூட்டுறவு பயிற்சி உடையவராயும். 25 வயது தொடக்கம் 40 வயதுக்குட்பட்டவராயும் இருத்தல் வேண்டும். பிணை ரொக்கம்: 1000/- ரூபா, ஆதனம்3000/- ரூபா, சம்பளம் 100/-ரூபா வருடா வருடம் 7 1/2/- ரூபா வீதம் 200/- ரூபாவரை உயர்த்தப்படும். விண்ணப்ப முடிவு திகதி: 23-8-68. வ. தர்மராசா, காரியதரிசி, வதிரிட்டி ப. நோ. கூ. சங்கம், காங்கேசன்துறை.
31

**திருமண அழைப்பு**

சண்முகபாலன் — புவனசுந்தரி

முகாந்திரம் S. P. இராசநாயகம் தம்பதிகளின் புத்திரன் செல்வன் சண்முகபாலனுக்கும் கொக்குவில் மேற்கு T. அரைசாமி தம்பதிகளின் புத்திரி செல்வி புவனசுந்தரிக்கும் 22-8-68 வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் வண்ணை வைத்தீஸ்வரர் கோவிலில் திருமணம் நிகழும். பிற்பகல் மணமகனில்லத்தில் வரவேற்புபசாரம். நண்பர்கள் உறவினர்களை அன்புடன் அழைக்கிறோம். 196/3, பொன்னம்பலவேன், வண்ணார்பண்ணை.
33

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்ப்பு நிராகரிப்பு; காணி சுவீகரிப்பு உறுதி

## யாழ். ஆஸ்பத்திரி விஸ்தரிப்பு நடவடிக்கை

யாழ்ப்பாணம், புதன்

வெளிநோயாளர் சிகிச்சை நிலையம் கட்டுவதற்கு யாழ்ப்பாணம் மாநகரசபைக்குச் சொந்தமான காணியைச் சுவீகரிப்பதற்குத் தெரிவிக்கப்பட்ட எதிர்ப்பு நியாயங்கள் சுகாதார அமைச்சரால் நிராகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

எதிர்ப்பு நியாயங்களை நிராகரித்த சுகாதார அமைச்சர் உடனடியாக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வெளிநோயாளர் நிலையத்தை அமைக்கவேண்டிய நிலத்தை யாழ்ப்பாணம் மாநகரசபையிடமிருந்து சுவீகரிக்கும்படி உத்தரவிட்டிருப்பதாகவும் அறியப்படுகிறது.

காணி சுவீகரிப்புக்கு யாழ்ப்பாணம் மாநகரசபை பதில் ஆணையாளர் மாநகரசபை முன்னாள் மேயர்கள், முன்னாள் உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர்.

எதிர்ப்பு நியாயங்களை விசாரணை செய்த யாழ்ப்பாண மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. மி. முருகேசபிள்ளை, விசாரணை சம்பந்தமான அறிக்கையை சுகாதார அமைச்சுக்கு அனுப்பியிருந்தனர்.

இந்த விசாரணையின் போது காணி சுவீகரிப்பு எதிர்ப்பாளர் சார்பாக நியாயவாதிகளும், நியாயதூரந்தரர்களும் ஆஜராகி எதிர் நியாயங்களை எடுத்துக் கூறினார்கள். இவர்களின் நியாயங்களை சுகாதார அமைச்சு நிராகரித்துவிட்டதாகத் தெரியவருகிறது.

[உடு. நிரு.]

### நவீன பஸ்......

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

சம்பின்னை யாழ்ப்பாணம் பஸ்நிலையம் அமைப்பது சம்பந்தமாக யாழ்ப்பாணம் மாநகர சபையினரோடும். இ. போ. சபை மேனேஜர்களுடனும் தொடர்பு கொண்டு பேச்சு வார்த்தைகள் நடாத்தினர். இதன் பலனாக ஒர் சமாதான ஒழுங்கு நிறைவேறக்கூடியவசதி ஏற்பட்டுள்ளது.

இச்சமாதான ஒழுங்கின்படி இ. போ. சபையினர் வருடமொன்றுக்கு பத்தாயிரம் ரூபாய் மாநகர சபைக்கு கொடுப்பதற்கும் அதேவேளையில் புதிய பஸ்நிலைய அமைப்புக்கு வேண்டிய நிலத்தை நெடுங்காலக் குத்தகையில் மாநகர சபையிடமிருந்து இ. போ. சபை பொறுப்பேற்பதற்கும் சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளது. விரைவில்புதிய பஸ்நிலையத்திற்கான பூர்வாங்க வேலைகள் ஆரம்பிக்கப்படும்.

### தசாக அழைப்பு

உடுவில் அம்மன் கோவில் அர்ச்சகரும் ஷ கோவில் சொந்தக்காரருமாகிய சிவகடாக்ஷக் குருக்கள் அவர்கள் கீலக ஆண்டு ஆடித்திங்கள் 30ந் நாள் 14-8-68 புதன்கிழமை காலை சமாதியடைந்தார். அவர்களின் தசாக்கிரியைகள் எதிர்வரும் ஆவணி மாதம் 7ந் நாள் 23-8-68 வெள்ளிக்கிழமை நடைபெறும். உறவினர்களும் நண்பர்களும் இவ் அறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும். புதல்வர்கள், மூத்துசாமிசர்மா, பாலசுப்பிரமணியசர்மா. 30

### அனலைதீவில்

### மரண விசாரணை அதிகாரி இல்லை

அனலைதீவு, செவ்.

அனலைதீவில் நிரந்தரமாக திடீர் மரணவிசாரணை அதிகாரி ஒருவரது இடம் கடந்த ஒரு வருட காலமாகக் காலியாக இருந்துவருகிறது. இங்கு நடைபெறும் திடீர்மரணங்களை விசாரணை செய்வதற்காக நயினாதீவிலிருந்து மரணவிசாரணை அதிகாரியை அழைத்துவர வேண்டியேற்படுகிறது' என்று அனலைதீவு முற்போக்கு வாலிபர் இயக்கத்தினர் யாழ். அரசாங்க அதிபருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளனர்.

## திருமணம்

நிகழும் கீலக ஆண்டு ஆவணித்திங்கள் 10ந்நாள் (26-8-68) இரவு 10-30 மணிக்கும் 11-30 மணிக்கும் இடையில் வரும் சுபவேளையில் இடாக்குத்தர் குணரத்தினம் ஜெசிமாயா தம்பதிகளின் மகன் திருநிறை செல்வன் திருச்சந்திரனுக்கும் திரு. ஹண்டி பேரின்பநாயகத்தின் மகள் திருநிறை செம்மனச்செல்விக்கும் மணமகள் இல்லத்தில் சைவமுறைப்படி திருமணம் நடைபெறும். நண்பர்களையும் உறவினர்களையும் இதிற் கலந்து மணமக்களை வாழ்த்திப் போகுமாறு மணமகனின் பெற்றோரும் மணமகளின் தந்தையாரும் அன்புடன் அழைக்கின்றனர். நண்பர்களும் உறவினர்களும் இவ்வழைப்பை ஏற்குமாறு வேண்டப்படுகின்றனர்.

மணமகன் இல்லம்
3ம் மைல், கொக்குவில்.

மணமகள் இல்லம்
'அமிர்தம்' மானிப்பாய்.

937

இலைத்திக்கை ஏழாலை லிமிடெட் கூட்டுறவுத் தாபனத்தைச் சேர்ந்த யாழ்ப்பாணக் கிளை கோவில் [illegible] 66-ம் இலக்கத்திலுள்ள அவர்களது [illegible] 1968-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21-ம் திகதி [illegible] நடைபெறும்.

### நெசவு நிலையம்

உரும்பராய், புதன்

கைதடி வடக்கு நெசவு நிலையத் திறப்புவிழா இன்று காலை 9 மணிக்கு தென். சாவகச்சேரி திரு. எஸ். சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெறும். இராமநாதபுரத்திலிருந்து குடிசைக் கைத்தொழில் இலாகா உதவி அதிபர் திரு. ச. சுந்தரலிங்கம் நிலையத்தைத் திறந்து வைப்பார்.

### ஆண்டு விழா

ஊர்காவற்றுறை, புதன்

சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக் கழகத்தின் 12வது ஆண்டுவிழா இன்று மாலை நடைபெறவிருக்கின்றது.

திரு. வைத்தியநாதம் தலைமையில், இவ்விழா சித்தன்கேணி மகாகணபதிப்பிள்ளையார் கோவில் வீதியில் நடைபெறும்.

### நெடுந்தீவு.........

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

பிரேத பரிசோதனை நடத்தினார்கள். எட்டுச் சடலங்களும் பல நாட்களுக்கு முன்னர் கடலில் இறந்திருக்கலாமெனச் சந்தேகிக்கப்படுகின்றது. இறந்து கிடந்த சடலங்களின் சில உறுப்புகள் மீன்களால் கொத்தப்பட்டுக்கிடந்தனவாம்.

### நாவற்குழி......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வும், பௌத்த சங்கத்தினரும் இங்கு பலகாலமாக வீடில்லாது வாழும் சிங்கள மக்களுக்கு, வீடமைப்புத் திட்டம் ஒன்று அமைத்துத் தருமாறு கோரினர். இவ்வேண்டுகோளுக்கிணங்க இத்திட்டம் உருவாக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சகல காரியாதிகாரி பிரிவிலிருந்தும் மொத்தம் 29 சிங்களக் குடும்பங்கள் வீட்டுக் குடியேற்றத் திட்டத்துக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு குடும்பத்துக்கும் இரண்டு பரப்புக் காணியில் வீடு அமைத்துக் கொடுப்பதே அரசாங்கத்தின் திட்டமாகும்.

ஆனால் இதற்கான காணி நாவற்குழி கைதடிப் பகுதியில் இன்னமும் தெரிவு செய்யப்படவில்லை. யாழ். மாவட்டத்தில் எங்காவது முடிக்குரிய காணியிருந்தால் சிங்கள மக்களுக்கான வீட்டுத் திட்டமொன்று அமைக்கப்படுமென திரு. வேர்ணன் அபயசேகரா குறிப்பிட்டார். [சு. நி.]

### வடமராட்சியில்

### இளம்பிள்ளைவாத தடுப்பு இயக்கம்

உடுப்பிட்டி, செவ்.

வடமராட்சிப் பகுதியில் இளம்பிள்ளை வாதத் தடுப்பு இயக்கத்திற்கு வெற்றிகரமான [illegible] ஒத்துழைப் [illegible] வெற்றியை அளித்துள்ளது

என்று வடமராட்சி சுகாதார மத்திய முழுமைக்குச்சேர்ந்த சுகாதார பரிசோதகர் திரு. எஸ், சண்முகநாதன் கூறினார்.

இப்பகுதியில் இம்மாதம் 9-ந் திகதி இத்தடுப்பு இயக்கம் ஆரம்பமானது.

### நைஜீரிய போர்

எனூக், ஆக. 20

பிரிவினை பியாவ்ராவான கிழக்கு நைஜீரியாவின் எஞ்சியுள்ள முக்கிய நகரங்களில் ஒன்றான அபாவை நோக்கி சமஷ்டி நைஜீரியத் துருப்புகள் முன்னேறிச் செல்வதாக பியாவ்ரா வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

### யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

மூன்றாந் தவணை முன்பு அறிவித்தது போன்று 26-8-68 தொடங்கமாட்டாது. 1-9-68 ஞாயிற்றுக்கிழமை தொடங்கும். விடுதி மாணவர் வருந்திகதி 31-8-68. 11-வது வகுப்பு மாணவரின் சோதனை 29-8-68 தொடக்கம் 1-9-68 வரை நடைபெறும்.

940 அதிபர்.

## ஆங்கில மாணவ ஆசிரியருக்குப் பயிற்சிவகுப்புகள்

உடுவில், செவ்வாய்

இலங்கை பூராவிலும் உள்ளபாடசாலைகளில் வரும் செப்டம்பர் மாதம் முதலாம் திகதியிலிருந்து நாலாயிரத்து இருநூறு மாணவ ஆசிரியர்கள் பதவியேற்கவிருக்கின்றனர்.

1966-ம் ஆண்டில் நடத்தப்பெற்ற மாணவ ஆசிரியர் பரீட்சைகளில் சித்தியடைந்தவர்களுக்கிடையிலான நேர்முகப்பரீட்சை பிராந்தியக் கல்வி அலுவலகங்களில் அண்மையில் நடைபெற்றதை தொடர்ந்து, நேர்முகப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான நியமனக்கடிதங்களை கல்வி அமைச்சு அனுப்பிவருகின்றது.

ஆங்கில மாணவ ஆசிரியராக தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு நியமனக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதைத்தொடர்ந்து, அவர்களுக்கான பயிற்சி வகுப்பு நேற்றுமுதல் யாழ்ப்பாணம் வேம்படி பாடசாலையில் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. ஆங்கிலம் தவிர்ந்த ஏனைய பகுதி மாணவ ஆசிரியர்களுக்கான நியமனக்கடிதங்கள் மிகவிரைவில் பரீட்சார்த்திகளுக்கு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. செப்டம்பர் முதல் திகதியிலிருந்து இவர்கள் தொடர்ந்து நியமனம் பெற்றுக் கொள்ளுவார்கள்.

## சிவலோகநாதன் மரணம்பற்றி புதிய தகவல்கள்

முல்லைத்தீவு, செவ்,

முல்லைத்தீவு ஒட்டிசுட்டான் விவசாயப்படையைச் சேர்ந்தவரும் மர்மமரணத்துக்குள்ளானவருமான சிவலோகநாதன் மரணம் பற்றித் தமக்குக்கு ஆதாரபூர்வமான திடுக்கிடும் தகவல்கள் பல இரு தினங்களுக்கு முன்பு கிடைத்துள்ளதாகவும், இதன்படி மேற்படி விவசாயப்படையைச் சேர்ந்த ஒரு பொறுப்புள்ள அதிகாரிக்கும் அங்கு மரக்கடத்தலில் ஈடுபட்டிருந்த ஒரு கோஷ்டிக்கும் இந்த மரணத்தில் கூடிய பங்குண்டென்றும் அறிய முடிவதாகவும், முல்லைத்தீவுப் பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறினார். இந்தத் திடுக்கிடும் தகவல்கள் இரகசியப் பொலிசாருக்கு அனுப்பி வைக்கப்படுமாம்.

## சந்தேக நபர்கள் நகர வீதிகளில் பவனி

### திருட்டுப் பொருள்கள் காட்சி

நல்லூர், புதன்

யாழ்நகரில் நடைபெற்ற பிரபல களவுகள் சம்பந்தமாக கைது செய்யப்பட்டவர்களின் வீதி பவனி ஒன்று நேற்றுக் காலை சுமார் 2 மணி நேரம் யாழ்ப்பாணத்தின் பிரதான வீதிகளில் நடைபெற்றது.

அண்மையில் நடைபெற்ற பல களவுகள் சம்பந்தமாக கைது செய்யப்பட்ட அறுவரையும் யாழ்ப்பாணம் பொலிசாரே இவ்வாறு வீதி பவனியாக அழைத்துச் சென்றனர். மாலைகள் சூட்டப்பட்டு சந்தேக நபர்கள் களவாடிய கடைக்கும் கொண்டுசெல்லப்பட்டு அங்கு நின்றவர்கள் மத்தியில் அறிமுகமும் செய்து வைக்கப்பட்டனர்.

களவு போன பொருட்கள் யாவும் பொலிசாரால் மீட்கப்பட்டுள்ளன. சந்தேக நபர்கள் பகலில் வியாபாரிகளாகவும் இரவில் திருடர்களாகவும் வாழ்க்கை நடத்திவிருப்பதாக பொலிசார் தெரிவித்தனர்.

பிஸ்கட் பாக்கட்டுகள், பவுடர் டின்கள், சவுக்காரங்கள், சீப்பு மற்றும் பல பொருட்களும் பொலிசாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

### ரயிலில் ரூபா 3009 களவு

நல்லூர், செவ்.

கொழும்பிலிருந்து நேற்று வந்துகொண்டிருந்த தபால் ரயிலில் பிரயாணஞ்செய்து கொண்டிருந்த ஒருவரது ரொக்கப்பணம் ரூபா 3000 மும் சில பொருட்களும் களவாடப்பட்டு விட்டதாக பொலிசில் புகார்செய்யப்பட்டுள்ளது.

ஓமந்தைக்கும் மாங்குளத்திற்குமிடையேநடைபெற்றதாகக் கருதப்படும் இச்சம்பவம் பற்றி புங்குடுதீவு 12-ம் வட்டாரத்தைச் சேர்ந்த குமாரசுவாமி என்பவர் பொலிசில் புகார் செய்ததைத் தொடர்ந்து மன்னார் உதவிப்பொலிஸ் சுப்பிரின்டென் திரு. செனிவரத்தின, வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. இராசநாதன் ஆகியோர் புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org